York Region DISTRICT SCHOOL BOARD
InspireLearning!

**EDUCATION CENTRE - AURORA (கல்வி மையகம் - ஓரோரா)**

60 Wellington Street West
Box 40, Aurora, ON L4G 3H2
தொலைபேசி: 905.727.3141 905.895.7216
905 722.3201 416.969.8131

தொலைநகல்: 905 727.1931
இணையதளம்: www.yrdsb.ca

செப்ரெம்பர் 9, 2015

அன்புடைய பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களே,

பெப்ரவரி 2015 இல், ஒன்றாரியோ கல்வி அமைச்சு (Ontario Ministry of Education) திருத்தியமைக்கப்பட்ட சுகாதார மற்றும் உடற்பயிற்சிக் கல்வி பாடத்திட்டத்தை (Health and Physical Education Curriculum) வெளியிட்டது. நிகழும் பாடசாலை வருடத்தின் ஆரம்பத்திலிருந்து பொது நிதியைப் பெறும் அனைத்து ஒன்றாரியோ பாடசாலைகளிலும் இத்திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டம் செயற்படுத்தப்படுதல் அவசியமாகும்.

பெப்ரவரி மாதம் தொடக்கம், இப்பாடத்திட்டத்தைக் குறித்து, மன்றத்திலிருந்தும் பாடசாலைகளிடமிருந்தும் பல கேள்விகளைப் பெற்றோர் வினவியுள்ளனர். மேலும், இத்திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின் அமுலாக்கல் செயல்முறையைக் குறித்து கல்வி அமைச்சுடன் (Ministry of Education) நாம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம்.

முன்பே அறிவிக்கப்பட்டவாறு, சுகாதார மற்றும் உடற்பயிற்சிக் கல்வி பாடத்திட்டம் (Health and Physical Education Curriculum) 2015-2016 பாடசாலை வருடம் முழுவதும் கற்பிக்கப்படும். இருந்தபோதிலும், பாடத்திட்டத்தின் மனித வளர்ச்சி மற்றும் பாலியல் ஆரோக்கியம் (Human Development and Sexual Health) சம்பந்தப்பட்ட பாகங்கள் 2016 வருடத்தின் இளவேனில் பருவத்திலேயே தரம் 1-8ம் வகுப்பறைகளில் செயற்படுத்தப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இக் காலவரையானது, பாடத்திட்ட ஆதார வளங்களைப் பூர்த்திசெய்வதற்கும், கற்பிக்கும் அலுவலகர்களுக்கு தொழில்சார் விருத்தி வாய்ப்புகளை வழங்குவதற்கும், பெற்றோருக்கு மேலதிக வளங்களை விநியோகம் செய்வதற்கும் மன்றத்திற்கு வழிவகுக்கின்றது.

மாணவர்களின் அடைவுநிலையிலும் நலனிலும் பெற்றோரும் குடும்பங்களுமே எமது மிக முக்கிய பங்குதாரர்களாவர்; ஆதலால், இவ்வருடம், மனித வளர்ச்சி மற்றும் பாலியல் ஆரோக்கியம் (Human Development and Sexual Health) சம்பந்தப்பட்ட பாகங்கள் முறையாக வகுப்பறையில் அறிமுகப்படுத்தப்பட முன்னர், உங்களுக்கு அது குறித்து அறிவிக்கப்படும்.

எமது ஆசிரியர்களும் பாடசாலை அலுவலக உறுப்பினர்களும் திறன்மிக்க, அர்ப்பணிப்புள்ள தொழில்நெறிஞர்களாவர்; ஆகவே, இப்பாடத்திட்டத்தின் எல்லா பாகங்களும் ஏனைய பாடத்திட்டங்களும் வயதிற்கேற்ற முறையில் கரிசனையுள்ள மற்றும் பாதுகாப்பான சுற்றாடலில் கற்பிக்கப்படும் என்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

மேலதிக தகவல்கள் மற்றும் மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்கள் உள்ளடங்கிய, முழுமையான சுகாதார மற்றும் உடற்பயிற்சிக் கல்வி பாடத்திட்டம் (Health and Physical Education Curriculum) மற்றும் பெற்றோர் வழிகாட்டிகள் ஆகியவற்றின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள மன்ற இணையதளத்தை அணுகுங்கள்: www.yrdsb.ca

உண்மையாக,

J. Philip Parappally (ஜே. ஃபிலிப் பரப்பல்லி)
Director of Education (கல்வி நிர்வாகி)
York Region District School Board (யோர்க் பிராந்திய பாடசாலை மன்றம்)